செ.வெ.எண்.49 நாள்.26.01.2018.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொங்கந்தான்பாறை கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக பங்கேற்றார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், குடியரசு தினத்தினையொட்டி கிராம சபை கூட்டம் இன்று (26.01.2018) நடைபெற்றது. பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொங்கந்தான்பாறை சமுதாய நலக் கூடத்தில் கிராமத்தின் பெரியவர் திரு.இசக்கி வெள்ளப்பாண்டி அவர்கள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையாளராக கலந்து கொண்டார்.

கூட்டத்தில், பொது நிதி செலவினம், திட்ட அறிக்கை, குடிநீர் சிக்கனம், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், அந்தியோதயா இயக்கம், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், முழு சுகாதார திட்டம், சுகாதார மேம்பாடுகள், திடக்கழிவு மேலாண்மை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விளக்கி கூறப்பட்டு, ஒப்புதல் பெறுதல் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

ஊராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்திடவும், புதிதாக தேவைப்படும் திட்டங்கள் குறித்த கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிப்பது குறித்தும் கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது. இக்கூட்டங்களில் பெரும்பான்மையினர் கலந்து கொண்டு சமுக தணிக்கை செய்திட வேண்டும். ஊருக்குத் தேவையானவைகளை இக்கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிப்பதால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகிறது. எனவே, அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதை முழுமையாக பயன்படுத்திட வேண்டும். முழு சுகாதாரத்தினை பின்பற்றினால் தான் டெங்கு போன்ற நோய்களை தடுக்க முடியும். குழந்தைகள் உள்ளிட்ட அனைவரும் கழிப்பிடங்களையே பயன்படுத்திட வேண்டும். குழந்தைகள் வீடுகளிலும், பள்ளிகளிலும் கழிப்பிடங்களை பயன்படுத்த பெற்றோர்கள் அறிவுறுத்த வேண்டும். காய்ச்சல் உள்ளிட்டவைகளுக்கு பொதுமக்கள் போலி மருத்துவர்களை அணுகாமல், அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைப்பெற வேண்டும்.

சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் வேண்டி மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குடிமைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில் ஸ்மார்ட் கார்டுகள் 95 சதவீத அளவிற்கு வழங்கப்பட்டு விட்டது. நமது மாவட்டத்தில் 8.5 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். முழு சுகாதாரத்தினை பின்பற்றி நமது மாவட்டத்திலேயே முன்மாதிரி ஊராட்சியாக திகழ வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

கிராம சபை கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.ஹெட்சி லீமா அமலினி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திட்ட அலுவலர் திருமதி.ஜெயசூர்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திமுருகன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சண்முகத்தாய், திருமதி.ஆறுமுகக்கனி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.